மோதமாவது அவ்வாநந்தத்தின் பரமகாஷ்டை, ச்ருணவாம-பகவத்கதைகளைக் கேட்கக்கடவோம். ப்ரப்ரவாமபாஹ்ய குத்ருஷ்டிகளுடன் உத்தமமாக வாதம் செய்யக்கடவோம். ப்ரப்ரவாம பாஹ்ய குத்ருஷ்டிகளுடன் உத்தமமாக வாதம் செய்யக்கடவோம், அஜிதா:-வேத விரோதிகளான தார்க்கிகர்களால் ஜயிக்கப்படாமலிருக்கக்கடவோம், ஸகல ப்ராணி ஜாதங்களையும் உள்ளும் புறமும் வ்யாபித்தவர் என்பது மஹதோர்ணவாத்ஸரிரஸ்யமத்யாத் என்பவைகளின் கருத்து, தர்ம ப்ரவர்த்தகரும் செந்தாமரைக் கண்ணனுமான பரமாத்மா, தன் ஸங்கல்பத்தால் என்னை ஸ்வாநுபவயோக்யனாகச்செய்யட்டும்.

மற்றவை மூன்று காலங்களுக்கும் ஒரேரீதியானவை.

இக்கிரந்தத்தில் ஸூக்ஷ்மமான ஸாரார்த்தங்கள் மாத்திரமே எழுதப்பட்டன. விஸ்தாரார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் ஸம்ப்ரதாயப்படி அவரவர் பெரியோர் முகமாய்த் தெரிந்து கொள்வது.

முற்றிற்று.

srivatsam

ஸாமவேத ஸந்த்யாவந்தந பாஷ்யம்.

ஸாமவேத ஸந்த்யாவந்தநமும் அநேகமாய் இந்த யஜுர்வேத ஸந்த்யாவந்தநம் போலவே யிருக்கும். சில இடங்களில் மாத்திரம் வேறுபட்டிருக்கும். செவ்வையாய்ப் பார்க்கவும். அந்தமந்த்ரங்களை எழுதப்படுகிறது.

ஹரி: ஓம்॥ அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபி வா முதலானதுகள் சொல்லவும். ஓம் அச்யுதாய நம:-அநந்தாய நம:-கோவிந்தாய நம: - கேசவாய நம: - நாராயணாய நம: - மாதவாய நம: கோவிந்தாய நம:-விஷ்ணவே நம:-மதுஸூதநாய நம:-த்ரிவிக்ரமாய நம:-வாமநாய நம: - ஸ்ரீதராய நம: - ஹ்ருஷீகேசாய நம: - பத்மநாபாய நம: - தாமோதராய நம:-பிறகு ப்ராணாயாமம் செய்யவேண்டியது.

ஸங்கல்பம்-ப்ராத:ஸந்த்யாவந்தனம் கரிஷ்யே, ஆபோ ஹி ஷ்டா மயோபுவ: தா ந ஊர்ஜே ததாதந । மஹேரணாய சக்ஷஸே । யோ வ: ஶிவதமோ ரஸ: । தஸ்ய பாஜயதேஹ ந:-உஶ

உஶதீரிவ மாதர:, தஸ்மா அரங்க³மாம வ:। யஸ்ய க்ஷயாய ஜிந்வத² ஆபோ ஜநயதா² ச ந: ஓம் பூ⁴ர்பு⁴வஸ்ஸுவ: இவைகளுக்குப் ப்ரதிபத பாஷ்யம் யஜுர்வேதார்த்தம் போல்.

ப்ராத: கால ஸந்த்யாவந்தநத்தில் ஸாமவேதிகள் ஸூர்யஶ்ச என்று சொல்லுகிற விடத்தில் இந்த மந்த்ரம் சொல்லப் படும்.

அஹஶ்சாதித்யஶ்ச புநாது ஸ்வாஹா |

பாஷ்யம். அஹ: - ஆச்ரிதர்களுடைய ஸம்ரக்ஷண விஷயத்தில் ஹீநனுகாதவன், எந்த ஆபத்திலும் அவர்களைக் கைவிடாமல் ரக்ஷிக்கிறவன், ஆதித்ய:-ஸூர்யன்போல் ப்ரகாசிக்கிறவன், கல்யாண குணங்களில் குறைவற்றவன், ஸூர்யமண்டலத்தின் மத்தியில் எழுந்தருளியிருக்கிறவன், அந்தபரமாத்மா என்னைப் பாபங்களினின்றும் ரக்ஷிக்கட்டும், தினத்துக்கு அபிமானிதேவதையான ஸூர்யன்என்னை ரக்ஷிக்கட்டும் என்று சிலர் வியாக்யாநம்.

srivatsam

ஆசமனம்-[illegible] | முதலான மந்த்ரம் சொல்லவேண்டியது. ப்ராணுயாமம்—3- அர்க்யம் விடவேண்டியது. 4-வது அர்க்ய மந்த்ரம்,ப்ராத: கால ஸந்த்யாவந்தநத்தில் ப்ராயச்சித்தார்க்யத்துக்கு இது மந்த்ரம்

யத³த்³ய கச்ச வ்ருத்ரஹந் । உத³கா³ அபி⁴ ஸூர்ய ।
ஸர்வம் தத³ஸ்து தே வஶே ||

பாஷ்யம்.—ஸூர்ய-ஜநங்களிடத்தில் தான் அந்தர்யாமியாயிருந்தும் தன்னுடைய ஸத்யஸங்கல்பத்தினுலும் ஜநங்களை நல்ல கார்யங்களில் ப்ரவர்த்திப்பிக்கிற பரமாத்மாவே! வ்ருத்ரஹந்-வ்ருத்ரன் என்று வறட்சியை யுண்டாக்கும் ஒரு அசுரனுக்கு (அல்லது) ஒரு பிசாசத்துக்குபெயர். அதை நாசம் செய்கிறவனே! தன்னுடைய ஆச்ரிதர்களுக்குள்ளே குறைவுகளைப் போக்கி ஸகலஸம்ருத்திகளையும் அளிக்கிறவன் என்று தாத்பர்யம். இந்த்ர - ஆச்ரிதர்களுக்கு எவ்வளவுகொடுத்தாலும் தன்னிடத்தில் கொஞ்சமும் குறையாத மஹத்தான ஐச்வர்யத்தை யுடையவனே! அத்ய-இப்பொழுது, யத்கச்ச-எந்த வ்யாபாரம் செய்

கிறீரோ! அதையெல்லாம் ஜனங்களுடைய க்ஷேமத்துக்காகச் செய்கிறீர். "நதேரூபம் நசாகாரஃ" என்று சொல்லுகிறபடியே தான் ஸமஸ்தமான ஐச்வர்யங்களினுலும் பரிபூர்ணனுகையால் தனக்காக ஒன்று ஸம்பாதிக்கைக்கு ஒரு வ்யாபாரமும் செய்ய வேண்டியதில்லை. ஆயினும் ஜகத்தை ஸ்ருஷ்டித்தல், மத்ஸ்யம் கூர்மம் முதலிய அவதாரங்களைச் செய்தல், இந்திரன் முதலிய தேவர்களைக்கொண்டு மழைபெய்தல் முதலியவைகளைச் செய்வித்தல், தேவர்கள் ஹவிஸ்ஸைப் பெறுகைக்கும் மநுஷ்ய யஜ்ஞம் முதலிய ஸத்கர்மங்களைச் செய்கைக்கும் யோக்யமான உதயம் முதல் அஸ்தமயம் வரைக்குமுள்ள காலத்தை ஸூர்யனைக்கொண்டு செய்வித்தல். இவையெல்லாம் தன்னுடைய பக்த ஜநங்களை ஸம்ரக்ஷிக்கைக்காகச்செய்கிறீர் என்று தாத்பர்யம்; (ஸர்வம் இத்யாதி) இந்த ஸகலமான ஜகத்தும் உம்முடைய வசத்திலே யிருக்கிறது. இந்த ஜகத்து தன்னுடைய ஹிதத்தைச் செய்துகொள்ளுகைக்கு ஸாமர்த்தியமின்றி யிருக்கையால் ஸர்வசக்தியையுடைய உமக்குப் பரவசமாயிருந்து உம்மால் ரக்ஷிக்கப்பட்டு க்ஷேமத்தை யடைகிறதென்று பொருள்.

srivatsam

வ்ருத்ராசுரனைக்கொன்ற இந்திரன்போலிருக்கிற ஸூர்யனே! இன்றையதினம் நீர் எந்த வ்யாபாரம் செய்கிறீரோ அதெல்லாம் ஜநங்களுடைய க்ஷேமத்தை யுத்தேசித்துச் செய்கிறீர். ஆகையால் அதெல்லாம் உம்முடைய ஸ்வாதீநத்திலிருக்கிறதென்று தாத்பர்யம்; பிறகு ஆசமனம்செய்து தர்ப்பணம் செய்யவேண்டியது; பிறகு ப்ராதஃசந்த்யா வந்தனமந்த்ரஜபம் கரிஷ்யே. யஜுர்வேதம் போல் [illegible] முதல் [illegible] வரைக்கும் சொல்லவும். பத்து ப்ராணாயாமம் செய்து பிறகு [illegible] என்னும் மந்த்ரத்தைமுதல் தொடங்கி கடைசிவரைக்கும் சொல்லி பிறகு 108 காயத்ரீ ஜபம் செய்து உபஸ்தானத்தில் "உத்தமேசிகரே தேவி" என்கிறது முதல் "கச்சதேவியதாஸுகம்" என்கிற வரையில் மந்த்ரம் சொன்னபின்பு, "மித்ரஸ்ய சர்ஷணீத்ருத" என்கிற மந்த்ரத்திற்குப் பதிலாக இந்த மந்த்ரம் சொல்லவேணும்.

[illegible] । வருண-ராவஸிவா திநீழ ।
[illegible] । ஸதாஸி தாரஸஹ்ஸமய ॥

ஓம் நமஸ்ஸவித்ரே ... ஸவித்ரே ... ஸவித்ரே
உத்புஞ்ஜஸ்ரவஸே ... உதியாவஸ் ||

பாஷ்யம்.—ஸூர்யனே! அபேக்ஷிதமான ஸமஸ்த வஸ்துக்களினால் பரிபூர்ணமாயும், நாலுபக்கங்களிலும் போக ஸமர்த்தமாயும், ஜலம் நிறைந்து முழுகிப்போகைக்கு ஹேதுவான த்வாரங்களில்லாததாயும், தன்னையடைந்தவர்களை அக்கரையையடைப்பிக்கிறதாயும், அநேகமான க்ஷேபணியை (ஓடக்காரன் தன்கையில் பிடித்துக்கொண்டு ஜலத்தைத் தள்ளிக்கொண்டு ஓடத்தை நடத்துகைக்கு ஸாதகமான தண்டத்தை) யுடையதாயுமிருக்கிற ஓடத்தை என்னுடைய க்ஷேமத்துக்காக ஏறுகிறேன். ஸமஸ்தைச்வர்யபரிபூர்ணனாயும், சேதநரை யங்கீகரிக்கைக்குச் சற்றும் ஜாகரூகனாய்ப் பார்த்துக்கொண்டிருந்து கொஞ்சமும் ஸமயமுண்டானவாறே அப்பொழுது அவனிடத்தில் ப்ரவேசித்து அங்கீகரிக்கிறவனாயும், சேதநா தன்னை யாச்ரயித்த வநந்தரம் அவர்களுக்கு துர்கதிவராமல் காத்து ஸம்ஸாரத்தைவிட்டு நீக்கி மோக்ஷத்தை யடைவிப்பிக்கிறவனாயும், காமம், க்ரோதம் முதலிய அநேகவிதமான வைரிகளை யழிக்கிறவனாயுமிருக்கிற ஆதித்யாந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணனை பஜிக்கிறேன் என்று தாத்பர்யம். ஆதித்யாந்தர்யாமியாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுக்கு நமஸ்காரம். இவ்விதம் மூன்றுதரம் தியாநம் செய்யவேண்டும். நீர் உதித்தபிறகு உம்மை யநுசரித்து நான் உதிக்கிறேன். என்னுடைய க்ஷேமத்துக்கு வேண்டிய கர்மங்களைச் செய்கிறேன். அதன்பிறகு "ஸஹஸ்ரசீர்ஷா" முதலானமந்த்ரம் சொல்லி யஜுர்வேத ஸந்த்யாவந்தனம்போல் கடைசிவரைக்கும்செய்து ப்ராணாயாமம் அபிவாதனம் செய்யவேண்டியது,

srivatsam

மாத்யாஹ்நிகம் பண்ணவேண்டிய முறை.

ப்ராதஸ் ஸந்த்யா வந்தனம்போல் செய்ய வேண்டியது. "ஸஹஸ்ரா" என்பதற்குப் பதில் "ஆபঃபுநந்து" என்ற யஜுர்வேதிகர் மாத்யாந்நிகத்தில் சொல்லுகிற மந்த்ரம் சொல்லவும் ஆசமநம் ததிக்ராவ்ணோ முதலான ப்ரோக்ஷண மந்த்ரங்களைச்சொல்லி ப்ரோக்ஷித்துக்கொண்டுபின்பு பிராணாயாமம் செய்து மாத்யாஹ்நத்தில் ப்ராயஸ்சித்தார்க்ய மந்த்ரம் செய்யவும்.

உதெ்ஷஹிமஶு-தாஉவஷ் । ஷுஷஹம் நாரவஷ் ।
ஐஷரஸெ௦ஷஸூர ॥

பாஷ்யம்.—ஸூர்ய - ஸூர்யனே? ஸூர்யன் தன்னுடைய கிரணங்களினால் ஜலத்தையிழுத்து மேகமாக்கிப் பிறகு மழை பெய்விப்பதினாலும், தன் கிரணங்களை விடுவதினாலும் பயிர்முதலிய ஓஷதிகளை வ்ருத்திசெய்வித்து அதினால் ஜநங்களுக்குக்ஷேமத்தைக் கொடுப்பதுபோல் ஸர்வேச்வரனும் ஜநங்களுக்கு நன்மையையே கொடுக்கிறான். அப்படி நன்மையைச் செய்தாகிற பெரிய ஸ்வபாவத்தை யுடையவன். அதற்குத் தகுந்த உபகரணங்களை யுடையவன். அப்படிச் செய்கிறவர்களில் ச்ரேஷ்டனாயிருக்கிறவன்-

இந்த மந்த்ரம் ஸூர்யபரமாகவும் வ்யாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

ஆசமநம் பிறகு தர்ப்பணம் முதலானதுகள் செய்து ப்ராணயாமம் ஸங்கல்பம்செய்து 10 பெரியகாயத்திரி ஜபம்செய்து பிறகுப்ராணயாமம் செய்து ஆயாதுவரதாதேவி சொல்லி 28 காயத்ரி ஜபம்செய்து srivatsam உபஸ்தானம்செய்து ஆஸத்யேநபதிலாக

ஆஸத்யேந ரஜஸா வர்த்தமானோ நிவேசயந்நம்ருதம் மர்த்யஞ்ச । ஹிரண்யயேந ஸவிதா ரதேநா ।

வரையில் அநுசந்தித்து அதன்பின் "உதித்யம் ஜாதவேதஸம்" தொடங்கி "தச்சக்ஷுர்தேவஹிதம் புரஸ்தாத்" என்கிறவரையில் அநுஸந்திக்கவேணும். இந்த மந்த்ரம் யஜுர்வேதிகளுடைய ஸந்த்யாவந்தநக்கிரமத்தில் மாத்யாஹ்நம் உபஸ்தாநமந்த்ரத்திலிருக்கிறது. இதற்கு பாஷ்யம் அங்கே எழுதப்பட்டிருக்கிறது. "பஶ்யேமசரத ஶ்ஶதம்" என்று அவர்கள் அநுஸந்திக்கிறவிடத்தில் மேல் கூறுகிற மந்த்ரத்தை இவர்கள் செய்யவேண்டியது. அபிவாதனம்செய்யவேண்டியது இவைகளுக்கு அர்த்தம் யஜுர்வேதஸந்த்யாவந்தனம் ப்ராதஃகாலம்போல் பண்ணவேண்டியது.

ஸூர்யஶ்சக்ஷுர்வாயு: ப்ராண: । அந்தரிக்ஷமாத்மா ।
வாயுரந்தரிக்ஷேண । ஸோமஶ்சந்த்ரமஸா ।
ப்ருஹஸ்பதிர்ப்ரஹ்மணா । அக்நிர்வாசா ।
இந்த்ர: ஸ்ரீயா । ப்ரஹ்மாணம் மஹஸா ।
வாசஸ்பதிர் ஜுஷதாம் ॥

பாஷ்யம்—நான் கண்ணினால் ஸூர்யன்போலாகக்கடவேன்; ஸூர்யன் ஸமஸ்தவஸ்துக்களையும் தன் ப்ரகாசத்தினால் அறிவதுபோல் என் கண்ணில் ஒரு மறைவின்றி ஸமஸ்த வஸ்துக்களையு மறியக்கடவேன்; அக்நி தன் தேஜஸ்ஸினால் ஒருவராலும் ஸ்பர்சிக்கப் போகாமல் ப்ரகாசித்துக்கொண்டிருப்பது போல் நான் சத்ருக்களினால் அவமாநம் பண்ணப்படாமலிருக்கும்படி தேஜஸ்வியாக ஆகக்கடவேன். வாயுபோல் ப்ராணவிச்சேதமில்லாதவனாகக் கடவேன். சந்திரன்போல் பரிமளத்தை யுடையனாகக்கடவேன். ப்ருஹஸ்பதிபோல் புத்திமானாகக் கடவேன். அச்விநி தேவதைகள்போல ரூபவானாகக்கடவேன். இந்திரனைப்போலவும் அக்நியைப்போலவும் பலவானாகக்கடவேன். ஸ்வாமீ! சரீராவஸாநத்தில் ப்ரஹ்மலோகமானஸ்ரீவைகுண்டத்தில் வாஸம் பண்ணக்கடவேன். "த்விஷந்த. பாபக்ருத்யாங்" என்கிறபடியே என்னுடைய பாபத்தை என்னுடைய சத்ருக்கள் அடையட்டும்.

ஸாயங்காலம் ஸந்த்யாவந்தனம்,

ப்ராதக்காலசந்த்யாவந்தனம் போல் ப்ரோக்ஷணம் ஆசமநம் ப்ராணாயாமம் ஸங்கல்பம் மார்ஜநம் செய்து அக்நிஶ்ச என்பதற்குப் பதிலாக

ராத்ரீ ஶ்ஶாவரு-ணஶ்ஶ்வ-நாத-ஸ்வாஹா ।

பாஷ்யம்.—ராத்ரி: - ஸமஸ்த ஸுகங்களையும் கொடுக்கிறவன். வருண: - தன்னை ஆச்ரயித்தவர்களை ரக்ஷிக்கைக்காகத் தானவர்களை வரிக்கிறவன். அவர்களால் ரக்ஷகனாகவரிக்கப்பட்டவன். அந்த ஸர்வேச்வரன் என்னைப் பாபத்தி நின்றும் ரக்ஷிக்கட்டும்.

ராத்திரிக்கு அபிமானி தேவதையான வருணதேவன் என்னை ரக்ஷிக்கட்டும் என்றும் சிலர் சொல்லுவார்கள்.

3-அர்க்யம் விட்டபிறகு 4-வது அர்க்யம்விடவேண்டியது.

அதின் மந்திரம்.

நதஸ்யோயயாவந, ரிவ-ஸீஶீதகஉத ஃ: ।
யொகூஷயெஉஊாஶஹவுாஊாதிஃ: ॥

பாஷ்யம்—எந்த புருஷன், தனக்கு ஹோமஞ் செய்விக்கிறவர்களோடு கூடமேல் லோகமான மோக்ஷத்தை யடைவிப்பிக்கிற பரமாத்வாகிய அக்நியின் பொருட்டு ஹவ்யத்தைக் கொடு

க்கிறானோ அவனுடைய சத்ருக்கள் அவனை எந்த மாயைகளினாலும் வெல்லமாட்டார்கள். ஹவ்யமென்கிறது ஹோமம் செய்யத்தகுந்த வஸ்து. ஹோமமாவது - தேவதையை யுத்தேசித்து ஒருவஸ்துவைக் கொடுத்தல். இங்கு ஹவ்யமாவது ஜீவாத்மா. ஹோமமாவது அதைப் பரமாத்மாவினிடத்தில் ஸமர்ப்பித்தல். ஜீவாத்மாவைப் பரமாத்மாவினிடத்தில் ஸமர்ப்பணம் செய்விக்கிறவன் ஆசார்யன். ஆக ஆசார்யனை முன்னிட்டுக் கொண்டு ப்ரணவத்தினால் ஜீவாத்மாவை பரமாத்மாவினிடத்தில் எவன் ஸமர்ப்பிக்கிறானோ? அவனை காமம் க்ரோதம் முதலியசத்ருக்கள் எவ்விதத்திலும் தன்வசமாக்கிக் கொள்ள ஸாமர்த்யமுடையவைகளாக ஆகமாட்டா என்று தாத்பர்யம்.

அக்நிஸேவை பண்ணுகிறவனை சத்துருக்கள் ஜயிக்கமாட்டார்களென்று சிலர் சொல்லுவார்கள்.

ஆயாதுவரதாதேவி சொல்லி ப்ராணாயாமம் செய்த பிறகு - 10 ப்ராணாயாமம் செய்து பிறகு 108-காயத்ரிஜபம் செய்து உபஸ்தானத்தில் மித்ரஸ்ய சர்ஷணீ முதலியது சொல்லவேண்டியது.

srivatsam

ஸாயங்காலத்திலும் எல்லா மந்த்ரமும் இதுவே. "உத்யந்தம் த்வாதித்யாநு உதிபாஸம்" என்கிற விடத்தில் மாத்திரம், ப்ரதிதிஷ்டந்தம் த்வாதித்யாநு ப்ரதிதிஷ்டாஸம்-என்று அனுஸந்திக்க வேணும்.

பாஷ்யம்.—நீர் அஸ்தமித்தால் உம்மை அநுஸரித்து நானும் ஸகல கர்மங்களில் நின்றும் நிவர்த்திக்கிறேன்.

ஸம்பூர்ணம்.

ருக்வேத ஸந்த்யாவந்தந பாஷ்யம்.

பாஷ்யத்தை அநுஸரித்து ப்ரதிபதம் எழுதப்பட்டது.

கிழக்குமுகமாய் ஸந்த்யாவந்தநம் செய்யவேண்டியது.

சிலமந்த்ரங்களுக்குயஜுர்வேதஸந்த்யாவந்தனம்போல் அர்த்தம்.

ஹரி: ஓம் || ஓம் கேசவாய ஸ்வாஹா - ஓம் நாராயணாய ஸ்வாஹா - ஓம் மாதவாய ஸ்வாஹா - கோவிந்த - விஷ்ணு - மதுஸூதந - த்ரிவிக்ரம - வாமந - ஸ்ரீதர - ஹ்ருஷீகேச - பத்மநாப - தாமோதர -